தெஹிஓவிட பிரதேச சபை - 2020

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தெஹிஓவிட பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டு கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் தெஹிஓவிட பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) அதிகாரசட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆண்டில் காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பிடப்பட்ட போதும் அம் மதிப்பீட்டு அறிக்கையை சபையினால் அங்கீகரிக்காது மீண்டும் மதிப்பீடு செய்ய வேறொரு குழுவை நியமித்திருக்கையில் மேலே மதிப்பீட்டின் மீது அதிகரித்த பெறுமதி ரூபா 168,119,089 மூலதனமாக்கப்பட்டிருந்தது. | 2019 ஆண்டில் மேற்கொண்ட காணி மதிப்பீட்டு பெறுமதி தவறுதலாக மூலதனமாக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் ஒப்பாய்வு அறிக்கைக்காக அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சரியான ஒழுங்கு முறையை பின்பற்றி சொத்துக்களை மூலதனமாக்க வேண்டும். |
| (ஆ) | அன்பளிப்பாக கிடைத்துள்ள 11 இயந்திரங்கின் கிரயத்தை இனங்கண்டு மூலதனமாக்கியிருக்கவில்லை. | விலைக் குழுவொன்றின் மூலம் பெறுமதிகளை இனங்கண்டுள்ளதுடன் எதிர்காலத்தில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | அன்பளிப்புக்களின் கிரயப் பெறுமதி மூலதனமாக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்த தளபாடங்கள் மற்றும் பொருத்துக்களிற்காக கிடைத்த வட்டம் ரூபா 111,314 இனை மூலதனாக்கியதன் காரணமாக | தளபாடங்களிற்காக கிடைத்த வட்டத்தை மூலதனமாக்க வேண்டியதன்க காரணமாக தளபாடங்களும் பொருத்துக்களும் மற்றும் | வியாபார வட்டம் கணக்கீடு செய்யப்படுவதில்லை சொத்துக்களை கொள்வனவு செய்ய |

| | | | |
|---|---|---|---|
| | அப்பெறுமதியால் தளபாடங்களும் பொருத்துக்களும் மற்றும் மூலதன ஈடுபடுத்தலுக்கு வருமானத்தால் பங்களிக்கும் கணக்கு கூடுதலாக காட்டப்பட்டிருந்தன. | மூலதன ஈடுபடுத்தலுக்கு உதவியின் மூலம் பங்களிக்கும் கணக்கிற்கு சீராக்கம் செய்தல் சரியாக குறிப்பிடலென அறிவிக்கப்பட்டிருந்தது. | செலுத்திய பணத்தை சொத்துக் கிரயமாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஈ) | காணியொன்றை பிரித்தலிற்காக கிடைக்க வேண்டிய ஒரு சதவீத பணமான ரூபா 145,290 இனை கடன்படுனராக கணக்கீடு செய்திருக்கவில்லை. | இதற்காக கடன்படுனர் ஒதுக்கீடு ஏற்பாடு செய்ய தவறியுள்ளதாகவும் அப் பணத்தை இனங்கண்டு கணக்கீடு செய்வதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. | கணக்கை சரிசெய்ய நடவகடிகை எடுக்க வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்ககுகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| ஒரு கணக்கு விடயத்திற்குரிய நிதிக்கூற்று பிரகார பெறுமதி ரூபா 298,857 மற்றும் ஒப்பீட்டு அறிக்கை பிரகாரம் பெறுமதி ரூபா 206,016 ஆனதில் ரூபா 92,841 ஆன வித்தியாசம் நிலவியது. | வித்தியாசம் இனங்கண்டு எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கணக்குகளை இணக்கம் செய்து சரி செய்து கொள்ள வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி 185 | தவிசாளரின் அங்கீகாரத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி நிலவிய ரூபா 27,479,853 பெறுமதியான முதலீடுகளிற்காக சபை அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | இதற்காக அங்கீகாரம் பெற எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | முதலீடு செய்யும் போது விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமானக் கோவையின் நிதிப் பிரமானம் 571 (3) | 2015 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரை காலத்திற்குரிய காலவதியான ரூபா 1,262,535 ஆன பிணை வைப்புக்கள் தொடர்பில் | தெஹிஓவிட புதிய வியாபார கட்டிடத் தொகுதி சம்பந்தமான ஒப்பந்தமிடல் இடம்பெறும் வரை அவ் ஒப்பந்த பிணை | ஒப்பந்தம் கைச்சாத்திடல் மேற்கொண்ட உடனே நிதிப் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொடர்புடைய பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வைப்பை நிறுத்தி வைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் சேவை தருனர் வருமானத்தின் கீழ் உழைக்கும் போது வரி செலுத்தல் இலக்கம் 07 | இரட்டை சேவையிலிருந்து பெரும் வருமானம் ரூபா 50,000 இற்கு குறைவெனின் வருமானத்திலிருந்து 10 சதவீதமும் ரூபா 50,000 இலும் அதிகமாயின் எந்தவொறு பெறுமதிக்கும் 20 சதவீதம் படி உழைக்கும் போது செலுத்தும் வரி செலுத்த வேண்டிய போதும், பிரதேச சபையில் கடமைபுரியும் இரண்டு அங்கத்தவர்களிற்காக 2019 நவம்பர் வரை செலுத்திய ரூபா 841,044 இற்காக ரூபா 84,104 வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பில் உள்நாட்டு இறைவரி திணைக்களத்திடம் விசாரித்து முன்நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | உள்நாட்டு இறைவரி சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 1,340,388 தொகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவினம் ரூபா 2,865,210 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

**வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி மற்றும் குத்தகை | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை வீதவரி மற்றும் குத்தகை மீதி ரூபா 3,657,006 தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தெரிவு செய்யப்பட்ட சில பிரிவுகளில் நிலுவை வீதவரிக்காக ஆதனத்தடை செய்ய சிவப்பு கட்டளை விநியோகிக்கப்பட்டுள்ள போதும் தொற்று நிலைமை காரணமாக அதனை நடைமுறைப்படுத்த முடியாது போனதாகவும் கடிதம் ஊடாக மற்றும் அலுவலர்கள் வீட்டிற்கு வீடு சென்று வருமானம் சேகரிப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | சட்டம் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவை வருமானம் வேண்டும். |

(ஆ) வாடகை

| | | |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை வாடகை மீதி ரூபா 2,919,057 தொகை நிலவியது. | நிலுவை வாடகையின் கீமணி தொகையை 12 தவணைகளில் அறவிடவும் எஞ்சிய நிலுவையை செலுத்துமாறு கடை உரிமையாளர்களுக்கு கடிதம் விநியோகித்து அறவிட்டுக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வாடகை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(இ) நீதிமன்ற தண்டப்பணம்

| | | |
| --- | --- | --- |
| மாகாண சபை பிரதான செயலாளரிடமிருந்து மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2020 திசெம்பர் 31 திகதி கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பண மீதியில் ரூபா 2,164,373 இரண்டு ஆண்டுகளை விஞ்சியிருந்து போதும் அறவிடப்படவில்லை. | 02 ஆண்டுகளை விஞ்சிய மீதியை திருத்தம் செய்தல் மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது. | அறவிட வேண்டிய வருமானத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

## 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி கிடைக்க வேண்டிய வேலை கடன்படுனர் மீதி ரூபா 81,529,088 மற்றும் செலுத்த வேண்டிய வேலை கடன்கொடுனர் மீதி ரூபா 91,786,151 ஆனது. | தெஹிஓவிட பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலகத்திற்கு கடிதம் அனுப்பியுள்ளதுடன் குறித்த அபிவிருத்தி கருத்திட்டத்திற்கு பணம் கிடைத்த பின்னர் கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளை தீர்த்துக் கொள்ள வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| பிரதேச சபையின் தேசிய உணவக நிர்மாண வேலைகளின் பூர்த்தி செய்த பகுதிக்காக ரூபா 929,966 தொகை 2020 ஆகஸ்ட் 28 திகதி செலுத்தியிருந்த போதும் மலசலகூடத்துடன் தொடர்பான வேலைகள் பூர்த்தி செய்யப்படாததால் கணக்காய்வு திகதிய 2020 ஒக்டோபர் 05 வரையும் திறக்க முடியாதிருந்தது. அவ்வாறே மதிப்பீட்டில் இருக்காத களஞ்சிய அறையொன்றிற்கு இடத்தை ஒதுக்கி கதவுவொன்றை பொருத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் பாதுகாப்பு வேலி இல்லாததால் வளவில் உபகரணங்கள் பாதுகாப்பின்றி காணப்பட்டது. | மதிப்பீட்டு உருப்படிகள் 31 இல் மாத்திரம் வேலை பூர்த்தி செய்து அதற்காக கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. முதல் ஒப்பந்தக்காரரின் மதிப்பீட்டினுள் மலசலகூட தொகுதி உள்ளடங்கியிருந்த போதும் அது செய்யப்படாத காரணத்தால் 2020 செப்தம்பர் 08 திகதி மீண்டும் மதிப்பீடொன்று அங்கீகரிக்கப்பட்டதாகவும் 02 மலசலகூடங்களை நிர்மாணிக்க அவ்விடத்தை தயார் செய்திருந்த போதும் களஞ்சியம் ஒன்று இல்லாததால் அதனை களஞ்சியத்திற்கு எடுத்து மலசலகூடத்தை வேறு இடத்தில் நிர்மாணிக்க முடிவாகியுள்ளதாகவும் இரண்டாம் மதிப்பீட்டின் பிரகாரம் உபகரணங்களை பாதுகாக்க கதவுகளை பொருத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | தேசிய உணவகத்தை பயனுள்ளதாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| சபைக்கு சொந்தமான பெக்கோ இயந்திரத்தை சேவையில் ஈடுபடுத்தும் போது பணம் அறவிட்டு மற்றும் அறவிடாது வழங்கப்பட்டிருந்ததுடன் இலவசமாக வழங்கல் தலைவரின் அங்கீகாரத்துடன் இடம்பெற்றிருந்தது. 2019 ஆண்டு முதல் 2020 ஆகஸ்ட் வரை இலவசமாக வழங்கிய மீட்டர் மணித்தியாலம் 1026.70 ஆனதுடன் அதனூடாக சபைக்கு இழக்கப்பட்ட வருமானம் ரூபா 1,613,550 ஆனது. பணத்திற்கு வழங்கி ஈட்டிய வருமானம் ரூபா 808,950 ஆன போதும் இயந்திரத்தின் எரிபொருள் மற்றும் திருத்த வேலைகளுக்கு செலவிட நேர்ந்த கிரயம் முறையே ரூபா 1,362,989 மற்றும் ரூபா 1,444,103 ஆனது. | 2019 ஒதுக்கீடு ஏற்பாடு செய்திருக்காததால் இலவசமாக செய்த சேவைகளை வருமானத்திற்கு எடுக்காததுடன் 2020 ஜனவரி முதல் ஜூன் வரை செய்த பொது வேலைகளுக்கு செலவிடப்பட்ட செலவுகள் வருமானத்திற்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சபை சொத்துக்களை சேவையில் ஈடுபடுத்தி பெற முடியுமான வருமானத்தை ஈட்டிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| வருமான பரிசோகர் மற்றும் சாரதி பதவிகளில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 03 வீதமான போதும் உள்ளவாறான எண்ணிக்கை முறையே 01 மற்றும் 02 ஆனது. வெற்றிடங்களிற்காக அப்பதவிகளில் பொறுப்பு வகிக்க முடியாத வேலை களத் தொழிலாளர் இருவர் வருமானம் சேகரிக்கும் கடமைகளிலும், நால்வர் சாரதி பதவிகளிலும் இணைக்கப்பட்டிருந்தனர். அவ்வாறே மூன்றாம் மட்ட ஒரு பதவியும், இரண்டாம் மட்ட 05 பதவிகளில் 13 வெற்றிடங்கள் மற்றும் ஆரம்ப மட்ட 05 பதவிகளில் 09 வெற்றிடங்களையும் நிரப்ப நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருமான பரிசோதகர் மற்றும் சாரதி பதவிகளில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை இல்லாததால் வெற்றிடங்களை நிரப்புமாறு பிரதான செயலாளரிடம் எழுத்து மூலம் கோரியுள்ளதுடன் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ள வேலை களதொழிலாளர் பதவியில் சேவை புரியும் ஊழியர்களை சாரதி கடமைகளில் ஈடுபடுத்தி உள்ளதாகவும் மூன்றாம நிலை, இரண்டாம் நிலை, ஆரம்ப நிலை எனும் பதவிகளிற்காக காணப்படும் அனைத்து வெற்றிடங்களையும் நிரப்பிக் கொள்ள பிரதான செயலாளரிற்கு எழுத்து மூலம் கோரியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | சபை வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |